DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
SESSIONS COURT FOR EXCLUSIVE TRIAL OF BOMB BLAST CASES,
CHENNAI AT POONAMALLEE, CHENNAI – 56

| | | | |
|---|---|---|---|
| **Spl S.CNo.** | **17/2022 (CC No.3/2018)** | Deposition of | **DW. 01** |
| Name | Tr. C. Rufus Marshall Ananth | Father's Name | |
| Street | | Village | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act of X of 1873 on the 20.07.2026.

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.**

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 11.05 A.M.**

நான் தற்போது தலைமை நீதித்துறை குற்றவியல் நீதிமன்றம், கோயம்புத்தூரில் சிரஸ்தாராக பணியாற்றி வருகிறேன். 2017ல் நான் நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றி வந்தேன். இந்த நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட அழைப்பாணையில் கண்டுள்ள அசல் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை நான் இன்று எடுத்துவந்துள்ளேன். Receive register 04.04.2017 to 12.05.2017ற்கான பதிவேட்டை எடுத்து வந்துள்ளேன் அதில் வரிசை எண். 2327 முதல் 3377 வரை உள்ளது. Despatch register 24.03.2017 to 01.06.2017 containing Serial no. 1310 to 2350 எடுத்து வந்துள்ளேன். கடந்த 10.04.2017 அன்று அடையாள அணிவகுப்பு நடத்துவதற்காக ஆய்வாளர், CBCID அவர்களால் கொடுக்கப்பட்ட மனுவினை பெற்று கொண்டதற்காக Receive registerல்

2573 என்று வரிசை எண் கொடுக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அன்றையதினமே குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவ்வாறு அந்த மனுவினை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியதற்காக Despatch registerல் வரிசை எண். 1562 - 10.04.2017ல் கொடுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் அடையாள அணிவகுப்பை முடித்து அதன் நடவடிக்கைகளை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார் அதனை Receive registerல் 3073 என்ற வரிசை எண்ணில் 02.05.2017ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர், CBCID அவர்களால் கொடுக்கப்பட்ட மனுவினை பெற்று கொண்டதற்காக Receive registerல் 2573 என்று வரிசை எண் கொடுத்ததற்காக பதிவேட்டின் சான்றிட்ட நகல் **எ.த.சா ஆ34** ஆகும் (அசல் பதிவேடு சரிபார்க்கப்பட்டது). மனுவினை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியதற்காக Despatch registerல் வரிசை எண். 1562 பதிவேட்டின் சான்றிடப்பட்ட நகல் **எ.த.சா ஆ35** ஆகும் (அசல் பதிவேடு சரிபார்க்கப்பட்டது). அடையாள அணிவகுப்பை முடித்து அதன் நடவடிக்கைகளை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார் அதனை Receive registerல் 3073 என்ற வரிசை எண்ணில் 02.05.2017ல் பதிவு செய்யப்பட்டுள்ளது அந்த வரிசை எண் 3073ல் பதிவேட்டின் சான்றிடப்பட்ட நகல் **எ.த.சா ஆ36** ஆகும் (அசல் பதிவேடு சரிபார்க்கப்பட்டது).

**முதல் விசாரணை முடிவடைந்த நேரம் 11.25 A.M.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 11.30 A.M.**

எ.த.சா ஆ34, 35 மற்றும் 36 பதிவு செய்யப்பட்ட காலகட்டத்தில் நான் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் நான் பணியாற்றவில்லை. எனவே இந்த பதிவேட்டின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எ.த.சா ஆ34, 35 மற்றும் 36 பற்றி நான் பதிவேடுகளின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை நான் நேரடியாக பார்த்ததில்லை என்றாலும் சரிதான். அந்த ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள எதிரியின் பெயர்களை என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். மனுவிலும், அடையாள அணிவகுப்பு நடவடிக்கைளிலும் எதிரி அபுதாகிரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா இல்லையா என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை முடிவடைந்த நேரம் 11.47 A.M.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2026.07.20 15:11:40 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.